# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்

# பாராளுமன்றம்

---

# 1991 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க,
# தேயிலைச் சிறுபற்று நிலங்கள்
# அபிவிருத்தி (திருத்தச்) சட்டம்

---

*[1991, ஆகஸ்ட் மாதம் 28 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.*

---

*1991, ஆகஸ்ட் மாதம் 30 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*

கொழும்பு அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

விலை : சதம் 45 | தபாற் செலவு : ரூபா 1.00

1991 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க, தேயிலைச் சிறுபற்று நிலங்கள் அபிவிருத்தி (திருத்தச்) சட்டம்

[1991, ஆகஸ்ட் மாதம் 28 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]

ச. வ.—ஓ. 9/90

1975 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க, தேயிலைச் சிறு பற்று நிலங்கள் அபிவிருத்திச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினல் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

சுருக்கப் பெயர்.

1. இச்சட்டம் 1991 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க, தேயிலைச் சிறு பற்று நிலங்கள் அபிவிருத்தி (திருத்தச்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம்.

1975 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்கச் சட்டத்தின் 15 ஆம் பிரிவைத் திருத்துதல்.

2. (இதனகத்துப் பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) 1975 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க, தேயிலைச் சிறு பற்று நிலங்கள் அபிவிருத்திச் சட்டத்தின் 15 ஆம் பிரிவு, அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (ஓ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியை உட்புகுத்துவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :—

"(ஓஓ) இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக, (இதனகத்துப் பின்னர் "சங்கங்கள்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) தேயிலைச் சிறுபற்று நிலங்கள் அபிவிருத்திச் சங்கங்களைப் பதிவு செய்தல், பதிவு செய்வதற்கான விண்ணப்பங்கள், சங்கங்கள் எந்த நிபந்தனைக்கும் கட்டுப்பாடுகளுக்கும் அமைவாகப் பதிவு செய்யப்படவேண்டுமோ அந்த நிபந்தனைகளும் கட்டுப்பாடுகளும், பதிவு செய்வதை மறுப்பதற்கு எதிரான மேன்முறையீடுகள், (சங்கத்தினதும் அதனது நிறைவேற்றுக் குழுவினதும் உறுப்பாண்மைக்கான தகைமைகள், சங்கத்தினது உறுப்பினர்களின் பதிவு இடாப்பு, சங்கத்தின் இலாபங்களை வெளிப்படுத்துதல், நிறைவேற்றுக் குழுவினதும் சங்கத்தினதும் கூட்டங்கள், சங்கத்தினது கணக்காய்வுகளும், கணக்குகளும், சங்கத்தின் உறுப்பினர்களுக்கும் சங்கத்திற்கும் இடையே எற்படும் பிணக்கை நடுத்தீர்ப்பின் மூலம் தீர்த்துவைத்தல் போன்றவற்றுக்கான ஏற்பாடுகள் உள்ளடங்கலாக) பதிவுக்காக விண்ணப்பிக்கும் சங்கங்களின் துணைவிதிகளில் உள்ளடக்கப்படவேண்டிய ஏற்பாடுகள், பதிவு செய்தலை இல்லாதாக்குவதற்கான ஏதுக்களும்; அத்துடன் இல்லாதாக்கல் கட்டளையில் இருந்து மேன்முறையீடுகள் என்பனவற்றிற்கு ஏற்பாடு செய்கின்றதான விதிகள்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 22 ஆம் பிரிவைத் திருத்துதல்.

3. முதன்மைச் சட்டவாக்கத்தின் 22 ஆம் பிரிவு, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :—

"(1) எந்த ஒழுங்குவிதிகள் இச்சட்டத்தினல் விதித்துரைக்கப்படுவதற்கு தேவைப்படுத்தப்படுகின்றதோ அல்லது இச்சட்டத்தின் கீழ் ஆக்கப்படுவதற்கு தேவைப்படுத்தப்படுகின்றதோ அந்த ஒழுங்கு விதி

கள் தொடர்பிலான எல்லா விடயங்களிலும் அமைச்சரானவர் ஒழுங்கு விதிகளை ஆக்கலாம். அமைச்சரால் ஆக்கப்படும் ஒழுங்குவிதி ஒவ்வொன்றும் கசெற்றில் வெளியிடப்படுதல் வேண்டும் என்பதுடன் அத்தகைய வெளியீட்டுத் தேதியன்று அல்லது அதன்கண் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய பிந்திய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.".

**ஒவ்வாமை இருக்கின்ற விடயத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல்.**

4. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை இருக்கின்ற விடயத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.